<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC 678/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அம்ஜத் இப்ராகிம் கான் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 19.01.2023.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

(1) நான் ஒவ்வொரு முறையும் ஆய்வுக்கு செல்லும் போது எத்தனை ரசீதுகள் உயரதிகாளிகளிடம் வாங்கி செல்வேன் என்றால் 16 சிலிப்புகள் வாங்கி செல்வேன். மேற்படி சிலிப்புகளின் வரிசை எண்கண் மாறுபடும் என்றால் சரிதான். எனக்கு கொடுக்கப்பட்ட வரிசை எண்களின் அடிப்படையில் தான் நான் எடுக்கும் மாதிரி பரிசோதனை பாக்கெட்டுகளின் மேற்படி வரிசை எண்ணை ஒட்டி ஆய்வுக்கு அனுப்புவேன் என்றால் சரிதான். மேற்படி 16 சிலிப்புகள் மட்டுமே நான் வாங்கி வருவதால் அதிக பட்சம் 4 கடைகளுக்கு ஆய்வுக்கு செல்வேன் என்றாலும், 4 பரிசோதனை மாதிரிகள் எடுக்க முடியும் என்றாலும் சரிதான். ஒரு கடைக்கு ஆய்வுக்கு செல்லும் போது எத்தனை பொருட்களை வேண்டுமானாலும் ஆய்வுக்கு உட்படுத்த முடியும் என்றால் சரிதான்.

(2) நான் ஒரே சமயத்தில் ஒரு கடையில் ஆய்வு செய்யும் போது வேறு, வேறு பொருட்கள் ஆய்வுக்கு அனுப்பும் போது அதன் முடிவுகள் பாதுகாப்பு இல்லை என்று வந்தால் மேற்படி தனித்தனி பொருட்களுக்கு சேர்த்து ஒரே

வழக்காக தாக்கல் செய்வேனா என்றால் மேற்படி நான் பரிசோதனைக்கு அனுப்பப்படும் மாதிரிகளில் வேறு, வேறு வரிசை எண்கள் ஒட்டப்பட்டிருக்கும் என்பதால் தனித்தனி வழக்கு தான் பதிவு செய்ய முடியும். இந்த வழக்கின் மாவட்ட நியமன அலுவலரிடம் இருந்து நான் பெற்ற சிலிப்பின் வரிசை எண். 24/027/304 வ.எண். 73/2018–2019 என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் மாதிரிக்கு உணவு பொருள் குறித்து பொதுவான ஒரு நபர் பயன்படுத்தி அவருக்கு ஒவ்வாமை ஏற்பட்டது என்று புகார் எதுவும் வரவில்லை என்றால் சரிதான். நான் சந்தேகத்தின் பேரில் தான் ஆய்வு செய்தேன். எனவே உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம் பிரிவு 59(1) ன் படி தவறு என்றால் சரியல்ல. நான் சந்தேகத்தின் பேரில் மாதிரி எடுத்து அனுப்பியது பாதுகாப்பற்றது என்று முடிவு பெறப்பட்டது.

(3) மாவட்ட உணவு பாதுகாப்பஹ நியமன அலுவலர் மாதிரி எடுக்கப்பட்ட உணவு பொருளானது ஆய்வில் பாதுகாப்பற்றது என முடிவு வந்தால் அதை மீண்டும் ஆய்வுக்கு அனுப்ப உரிமை உள்ளதா ? இல்லையா ? என்றால் உள்ளது. மேற்படி மறு ஆய்வுக்கு அனுப்புவதற்கு ஆய்வறிக்கை பெற்ற 30 நாட்களுக்குள் எதிரிகளுக்கு மேற்படி வாய்ப்பு கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மாவட்ட நியமன அலுவலர் மூலமாக பதிவுத் தபால் எதிரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு நியமன அலுவலர் தகவல் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய புகாரின் 59 முதல் 65 வரையான பக்கங்களில் மேற்படி அறிவிப்பு அனுப்பியதையும், எதிரிகள் பெற்றுக்கொண்டதற்கான ஆவணத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(4) மேற்படி எதிரிகளுக்கு யாருக்கு, எவ்வளவு பணம், எந்த வகையில் கட்டி ஆய்வறிக்கை பெறப்பட்ட 30 தினங்களுக்கு பிறகு மேல் முறையீடு செய்ய வேண்டும் என்ற விவரக்குறிப்பு எனது புகாரில் காணப்படவில்லை என்றால் மேற்படி எதிரிகளுக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பானது மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலரால் அனுப்பப்பட்டதாகும். மேற்படி அறிவிப்பில் எவ்வளவு தொகை, எந்த வங்கி கணக்கில் செலுத்த வேண்டிய விவரம் இல்லை என்று சொன்னால் நான் தாக்கல் செய்த புகாரில் இல்லை. நான் ஆய்வுக்கு சேகரித்த டீ தூளானது என்ன வகையான டீத்தூள் என்பதை எனது புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒரு டீ தூளுக்கு அரசு நிர்ணயத்துள்ள படி காலாவதி காலம் எவ்வளவு காலம் என்றால் 12 மாதங்களுக்கு மேல் இருக்கலாம். dust டீ தூளுக்கு எவ்வளவு காலம் காலாவதி காலம் என்றால் அதுவும் 12 மாதங்களுக்கு மேல் இருக்கும்.

(5) ஆய்வுக்கு எடுத்த பொருளை ஆய்வுக்கு அனுப்பிய பிறகு ஒரு வருட காலம் கழித்து ஆய்வு செய்தால் அந்த பொருளின் தன்மை முடிவு மாறுபடும் என்றால் உணவு பகுப்பாய்வு ஆய்வாளருக்கு தான் தெரியும். மேற்படி ஆய்வுக்கு

எடுத்த பொருளை ஒரு வருடம் கழித்து ஆய்வு செய்தால் அதன் தன்மை மாறும் என்ற விவரம் நான் தெரிந்து கொண்டேன் வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக டீ தூளை ஆய்வுக்கு எடுத்து அனுப்பும் போது கண்டெய்னர் பாக்ஸில் பேக் செய்து அதன் மேல் பிளாஸ்டிக் கவரில் பேக் செய்து அனுப்ப வேண்டும் இந்த வழக்கில் அவ்வாறு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள புகாரில் பக்கம் 57 ல் பகுப்பாய்வு அறிக்கையில் நான் பேக் செய்து அனுப்பிய விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கண்டெயினர் பாக்ஸில் நான் பேக் செய்து அனுப்பவில்லை.

(6) நான் கொண்டு சென்ற காக்கி நிற காகிதத்தில் தான் எதிரிகளின் கடையில் இருந்து சேகரித்த மாதிரிகளை பேக் செய்தேன் என்றால் சாட்சி முதலில் தான் கொண்டு சென்ற காக்கி நிற காகிதத்தில் பேக் செய்ததாக கூறிவிட்டு தற்போது எதிரிகளின் கடையில் வாங்கிய நெகிழியில் பேக் செய்து பின்பு காக்கி காகிதத்தில் பேக் செய்ததாக குறிப்பிடுகிறார். நான் மேற்படி விவரத்தை எனது புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. குறிப்பிட்டுள்ளேன். அதே போல நான் காக்கி நிற காகிதம் கொண்டு செல்வதற்கு எனது உயர் அலுவலரிடம் அனுமதி பெறவில்லை என்றால் தடிமனான காகிதம் பயன்படுத்திக்கொள்ள உணவு பாதுகாப்பு சட்டத்தில் வழிகாட்டுதல் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொன்னபடி தடிமனான காகதத்தில் பேக் செய்யும்படி குறிப்பிடப்படவில்லை கண்டெய்னர் பாக்ஸில் பேக் செய்து பிளாஸ்டிக் கவரில் பேக் செய்து சீல் செய்து அனுப்ப வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் அவ்வாறு தான் அனுப்பி உள்ளேன்.

(7) நான் கொண்டு காக்கி நிற காகிதத்தில் தான் பேக் செய்து அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. ஒரு உலர்ந்து டீ தூளை ஈரப்பதம் உள்ள பிளாஸ்டிக் கவரில் பேக் செய்து அனுப்பியதை ஒரு வருடம் கழித்து ஆய்வுக்கு எடுத்தால் அந்த டீ தூள் ஈரப்பதம் காரணமாக பூஞ்சை காளான்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் உண்டு. எனவே உணவு பொருள் பாதுகாப்பற்றது என அறிக்கை வர வாய்ப்பு உள்ளது என்றால் ஈரப்பதம் வாய்ந்த பிளாஸ்டிக் கவரில் உள்ள டீ தூளை ஒரு வருடம் கழித்து ஆய்வு செய்யும் போது பாதுகாப்பற்ற உணவு என அறிக்கை வரும் ஆனால் அவ்வாறு பூஞ்சை காளான் ஏற்பட்ட டீ தூளாக இருந்தால் Ignored என்று குறிப்பிட்டு அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

(8) எதிரிகளின் கடையில் டீ தூளை தவிர வேறு எதுவும் சந்தேகத்தின் அடிப்படையில் மாதிரி எடுத்தேனா என்றால் எடுத்தேன். மிக்சர் உணவு பொருளை எடுத்தேன். மேற்படி பொருளை டீ தூளோடு சேர்த்து ஆய்வுக்கு எடுத்தேன் என்றால் சரிதான். நான் ஆய்வுக்கு எடுத்த டீ தூளை உணவு பாதுகாப்பு சட்டத்தில் குறிப்பிட்ட படி கண்டெய்னரில் கொண்டு பேக் செய்து

அனுப்பாமல் நான் கொண்டு வந்த காக்கி காகிதத்தில் பேக் செய்து அனுப்பியதால் அதையும் ஒரு வருடம் கழித்து ஆய்வு செய்ததால் அது அதன் தன்மை மாறி பாதுகாப்பற்றது என்று என்னுடைய நடைமுறை செயல்பாட்டின் தவறினால் தான் மேற்படி உணவு பொருள் பாதுகாப்பற்றது என அறிக்கை வரப்பெற்றுள்ளது உண்மையிலேயே எதிரிகள் கடையில் இருந்த டீ தூள் பாதுகாப்பற்றது அல்ல என்று சொன்னால் சரியல்ல நான் உரிய நடைமுறைகளின் படி தான் ஆய்வுக்கு அனுப்பினேன்.

(9) ஆய்வுக்கு அனுப்பிய உணவு பொருள் brown colour added என்றும், மேற்படி டீ தூளில் கலந்துள்ள வேதிப்பொருள் sunset yellow, tartarazine, carmoisine என்று வந்துள்ளது. மேலும் dark brown colour என்று ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆய்வுக்கு பெறும் போது பிளாஸ்டிக் கவரில் மேற்படி நிறத்தில் காணப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் பேக் செய்து அனுப்பிய டீ தூள் வகைப்பாட்டை சரியாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல குறிப்பிட்டுள்ளேன் ஆனால் பெறப்பட்ட அறிக்கையில் அதன் வகைப்பாட்டை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆய்வறிக்கையில் என்ன டீ தூளை ஆய்வு செய்தார்கள் என்ற விவரம் குறிப்பிடப்பட்வில்லை என்றால் சரியல்ல குறிப்பிடப்பட்டுள்ளது.

(10) நான் காக்கி நிற காகிதத்தை பேக் செய்வதற்கு பயன்படுத்தியதால் தான் வேதியல் மாற்றம் ஏற்பட்டு brown colour added என்று வந்துள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் பாதுகாப்பற்ற உணவு பொருளை வைக்கவில்லை என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-K. Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.